செய்தி வெளியீடு எண்:ℱ]/2018 நாள்: 23.04.2018

**வேலூர் மாவட்டத்தில் ஏப்ரல் 29 ஆம் தேதி வரை அனைத்து பகுதிகளிலும் சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளது!**

**வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் சார்பாக 29வது சாலை பாதுகாப்பு வார விழாவில் விழிப்புணர்வு பேரணியை துவக்கி வைத்து மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்!!**

வேலூர் புதிய பேருந்து நிலையத்தில் வட்டார போக்குவரத்து அலுவலகம் மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) இணைந்து நடத்திய சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு வாகனப் பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார். இந்த 29-வது சாலை பாதுகாப்பு வாரம் 23.04.2018 முதல் 29.04.2018 வரை கடைபிடிக்கபடுகிறது.

இந்த சாலை பாதுகாப்பு வார விழாவில் 24.04.2018 அன்று அனைத்து இரு சக்கர வாகன முகவர்கள், நான்கு சக்கர ஓட்டுநர்கள் கலந்து கொள்ளும் தலைக்கவசம் மற்றும் சீட் பெல்ட் அணிவதன் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வு பேரணி, 25.04.2018 அன்று பொறியியல் கல்லூரி, கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் மருத்துவக் கல்லூரி மாண மாணவர்களிடையே போக்குவரத்து விதி மீறல்கள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல், 26.04.2018 அன்று பள்ளி மற்றும் கல்லூரி பேருந்து ஓட்டுநர்கள், அரசு போக்குவரத்துக் கழக பேருந்து ஓட்டநர்கள் மற்றும் கணினி மென்பொருள் தனியார் நிறுவன ஓட்டுநர்களுக்கு இலவச மருத்துவ முகாம் மற்றும் 108 ஆம்புலன்ஸ் பணியமைப்பு மற்றும் தமிழ்நாடு அவசர விபத்து முன் முயற்சிகள் துறை ஆகியவர்களுடன் கலந்தாலோசித்தல், 27.04.2018 அன்று வேலூர் மாவட்டத்தில் உள்ள சுங்கச்சாவடியில் சாலைப் பாதுகாப்பு வாசகங்கள் அடங்கிய துண்டு பிரசுரங்கள் விநியோகித்தல் மற்றும் வாகனத்தின் பின்புறங்களில் சிகப்பு நிற பிரதிபலிப்பான்கள் ஒட்டுதல், 28.04.2018 அன்று வாரசந்தைகள், பூங்காக்கள், பேருந்து நிலையங்கள் என பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் சாலைப் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை ஓட்டுநர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல், 29.04.2018 அன்று அதிவேகம், அதிகபாரம், தலைக்கவசம் மற்றும் சீட்பெல்ட் அணியாமல் பயணித்தல், வாகனத்தை ஓட்டும்போது கைபேசியை பயன்படுத்துதல் போன்ற விதிமீறல்கள் குறித்த சிறப்பு வாகன சோதனை மேற்கொள்ளுதல் போன்ற விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படும்.

மேலும் வேலூர் மாவட்ட காவல் துறையின் சார்பில் வருகிற ஏப்ரல் 29 ஆம் தேதி வரை தினசரி வேலூர் மாவட்டத்தில் உள்ள 8 துணைக் கோட்டங்களிலும் பல்வேறு சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படும் என்று மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.பகலவன் அவர்கள் தெரிவித்தார்.

இன்றைய நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) சார்பாக சாலை பாதுகாப்புகள் குறித்து அமைக்கப்பட்ட விழிப்புணர்வு பலகைகள் செயல்விளக்க கண்காட்சிகள் அடங்கிய பேருந்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பொதுமக்கள் பார்வைக்காக திறந்து வைத்தார். இப்பேருந்து வேலூர் மாவட்ட உள்ள அனைத்து பேருந்து வட்டார பேருந்து நிலையங்கள் மற்றும் முக்கிய பேருந்து நிறுத்தத்தில் பொதுமக்கள் பார்த்து பயனடையும் வகையில் இயக்கப்படும்.

இந்நிகழ்ச்சியில் வேலூர், இராணிப்பேட்டை, வாணியம்பாடி ஆகிய வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு உட்பட்ட ஓட்டுநர் பயிற்சி பள்ளி வாகனங்கள் இரண்டு சக்கர வாகன விற்பனை மையங்களை சார்ந்த வாகனங்கள் மற்றும் இந்திய செந்சிலுவை சங்க உறுப்பினர்கள் இப்பேரணியில் கலந்து கொண்டனர். இப்பேரணி வேலூர் புதிய பேருந்து நிலையத்தில் இருந்து கிரீன் சர்க்கிள் வழியாக வேலூர் பழைய பேருந்து நிலையத்தை சென்றடைந்தது. இப்பேரணியின் போது சாலை பாதுகாப்பு, உயிர் பாதுகாப்பு, சாலை விதிகளை மதிப்போம், தலைக் கவசம், உயர்க் கவசம், விபத்தில்லா சாலை பயணம் போன்ற பல்வேறு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் ஏந்தி சென்றனர். இதன் இறுதியில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் சாலை பாதுகாப்பு வார விழா குறித்து விழிப்புணர்வு பிரசுரத்தினை பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிநர்களுக்கு வழங்கினார்.

மேலும் இந்நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.பகலவன், வட்டார போக்குவரத்து அலுவலர்கள் திரு.ராமகிருஷ்ணன், திரு.மோகன், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) பொது மேலாளர் திரு.ரமேஷ், வணிக மேலாளர் திரு.தசரதன், வேலூர் இந்திய செஞ்சிலுவை சங்க செயலாளர் திரு.இந்திரநாத், மோட்டார் வாகன ஆய்வாளர்கள் திரு.விஜயகுமார், திரு.வெங்கடராகவன், திரு.கருணாநிதி, திரு.சிவராஜ், திரு.சரவணன், திரு.மோகன் மற்றும் பலர் கலந்துக் கொண்டனர்.

வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
வேலூர்-9.